அமெரிக்க இராஜாங்க திணைக்களம்
பேச்சாளர் அலுவலகம

தகவல் பத்திரம்

ஒக்டோபர் 27, 2020

**இந்தோ-பசுபிக் உறவுகளை முன்னேற்ற இலங்கை பயணிக்கும் இராஜாங்க செயலாளர் பொம்பேயோ**

*"எமது உறவானது பொதுவான ஜனநாயக விழுமியங்களை அடிப்படையாக கொண்டது என்பதுடன், இலங்கையின் துடிப்பான ஜனநாயகம் மற்றும் அதனது இறையாண்மையை அமெரிக்கா உறுதியாக ஆதரிக்கிறது."*

- அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக்கல் ஆர். பொம்பேயோ, பெப்ரவரி 3, 2020

இராஜாங்க செயலாளர் மைக்கல் ஆர். பொம்பேயோ 2020 ஒக்டோபர் 27-28 ஆம் திகதிகளில் இலங்கை, கொழும்புக்கு பயணமாவதுடன், அங்கு அவர் ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷ மற்றும் வெளிநாட்டு உறவுகள் அமைச்சர் தினேஷ் குணவர்தனவை சந்திக்கவுள்ளார். பாதுகாப்பு மற்றும் பொருளாதார விவகாரங்கள் தொடர்பான இந்தோ-பசுபிக் பங்காளர் என்ற வகையில், இலங்கையின் முக்கியத்துவத்தை இராஜாங்க செயலாளர் கோடிட்டுக்காட்டுவார். இலங்கையின் இறையாண்மைக்கான எமது உறுதிப்பாட்டையும் அவர் வலியுறுத்துவார் என்பதுடன், ஆட்சிமுறை மற்றும் நல்லிணக்க முன்னுரிமைகள் தொடர்பான முன்னேற்றத்தையும் ஊக்குவிப்பார்.

**அமெரிக்காவும் இலங்கையும்: இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் முக்கியமானதொரு பங்காண்மை**

- அமெரிக்க மற்றும் இலங்கை பங்காண்மையானது, ஜனநாயக ஆட்சிமுறை, சட்டத்தின் ஆட்சி, மத சுதந்திரம் உள்ளிட்ட மனித உரிமைகள், மற்றும் விதிமுறைகளை அடிப்படையாகக் கொண்ட சர்வதேச ஒழுங்கொன்றின் கீழ் அனைத்து நாடுகளும் வளம்பெறக்கூடிய திறந்த மற்றும் மீளெழுச்சியுடைய இந்தோ-பசுபிக் பிராந்தியமொன்றுக்கான தேவை தொடர்பான உடன்பாடு ஆகியவற்றுக்கான மதிப்பின் பகிரப்பட்ட விழுமியங்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.
- இந்தோ-பசுபிக் உறவில் இலங்கையின் இருப்பிடத்தை பிரதிபலிக்கும் மற்றும் இந்த தனித்துவமான இருப்பிடம் வழங்கும் வாய்ப்புகளை பயன்படுத்திக்கொள்ளும் இலங்கையின் பிராந்திய தொடர்புக்கான தங்களது நோக்கத்தை இலங்கை தலைவர்கள் கோடிட்டுக்காட்டியுள்ளனர்.
- நல்லிணக்கத்துக்கான இலங்கையின் உறுதிப்பாட்டை நாம் வரவேற்கிறோம். இந்த உறுதிப்பாடுகளுக்கு ஆதரவான சரியான நேரத்திலான முயற்சிகளானது அனைத்து இலங்கையர்களுக்கும் அமைதியானதும் சுபீட்சமானதுமான எதிர்காலமொன்றை தக்கவைத்துக் கொள்வதற்கு உதவ முடியும்.

**வெளிப்படையான உதவியின் வரலாறு**

- 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்ததிலிருந்து தற்போது வரை அபிவிருத்தி உதவிகள், பாதுகாப்பு ஒத்துழைப்பு, கல்வி பரிமாற்றங்கள், மற்றும் பரஸ்பரம் பயனளிக்கும் வர்த்தகம் மற்றும் முதலீடுகளை அமெரிக்கா வழங்கியுள்ளது.
- இலங்கைக்கான எமது உதவியானது கடன்களாக அல்லாது அன்பளிப்புகள் வடிவில் அமைந்திருப்பதுடன், இலங்கையின் சுயாட்சியை ஊக்குவிக்கவும் உயர்தரமான, வர்த்தக ரீதியாக சாத்தியமான, மற்றும் நிலையான திட்டங்கள் மற்றும் தனியார்துறை முதலீட்டை கவர்வதற்கும் உதவுகிறது.
- 2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய எஞ்சியிருக்கும் குற்றவாளிகளை சட்டத்தின் முன்பாக கொண்டு வருவதற்கு இலங்கையர்களுக்கு உதவுவதற்கும் பயங்கரவாத பயணங்களை தடுப்பதற்கும் மற்றும் பயங்கரவாத நிதியளிப்புக்கு எதிரான வழக்குகளுக்கு உதவுவதற்கும் 1.8 மில்லியன்

அமெரிக்க டொலர் பெறுமதியான புதிய பயங்கரவாத எதிர்ப்பு உதவித் திட்டங்களை இராஜாங்க திணைக்களம் வழங்குகிறது.

- கடந்த 20 வருடங்களில் 26 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான சுகாதார உதவிகளை அமெரிக்கா இலங்கைக்கு வழங்கியுள்ளது.
- COVID-19 உதவியாக 6 மில்லியன் அமெரிக்க டொலர்களை அமெரிக்கா இலங்கைக்கு வழங்கியுள்ளது.
- சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பு கடந்த செப்டெம்பர் மாதம் 200 புதிய செயற்கை சுவாசக் கருவிகளை இலங்கைக்கு அன்பளிப்பு செய்தது.
- யுத்தத்துக்கு பின்னரான வெடிபொருட்கள் மற்றும் கண்ணிவெடி அபாயங்களில் இருந்து இலங்கையை விடுவித்துக் கொள்வதற்கு 74 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான தொகையை அமெரிக்கா வழங்கியுள்ளது.
- வெளிநாட்டு உதவி மற்றும் நாடு முழுவதுமுள்ள நிறுவனங்களுடனான நேரடி பங்காண்மை ஊடாக இலங்கையின் பொருளாதார மற்றும் ஜனநாயக அபிவிருத்திக்கு நாம் தொடர்ந்தும் உதவி வருகிறோம். இலங்கை சுதந்திரம் அடைந்ததிலிருந்து 2 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான உதவிகளை வழங்கி நாம் இலங்கைக்கு ஆதரவை நல்கியுள்ளோம்.

**இந்தோ-பசுபிக் பாதுகாப்பு தொடர்பில் வலுவான ஒத்துழைப்பு**

- அமெரிக்க-இலங்கை பாதுகாப்பு ஒத்துழைப்பானது இரு நாடுகளினதும் திறன்களையும் இயங்குதளத்தையும் ஏற்படுத்திய பல்வேறுப்பட்ட கூட்டுப் பயிற்சிகள் மற்றும் நடவடிக்கைகளை உள்ளடக்கியது. மனிதாபிமான உதவி மற்றும் அனர்த்த பதிலளிப்பு மற்றும் கடல்சார் கள விழிப்புணர்வு போன்ற எமது பரஸ்பர பாதுகாப்பு நலன்களை இந்த ஒத்துழைப்பு தீர்க்கிறது.
- இந்தோ-பசுபிக் பிராந்தியத்தின் பரபரப்பான கடல் வழிப்பாதைகளை அடிக்கடி கடந்து செல்லும் அமெரிக்க கப்பல்களுக்கு உதவுவதற்கு தற்காலிக சரக்கு பரிமாற்ற முன்னெடுப்பின் (Temporary Cargo Transfer Initiative) ஊடாக இலங்கை சேவைகள் மற்றும் பொருட்களை அமெரிக்கா ஒப்பந்தம் செய்கிறது.
- முன்னாள் அமெரிக்க கடலோர காவற்படை கட்டர் கப்பலொன்றை 2018 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நாம் இலங்கை கடற்படைக்கு அன்பளிப்பு செய்தோம். இலங்கை கடற்படை தொகுதியில் இருக்கும் மிகப்பெரிய கப்பலான எஸ்.எல்.என்.எஸ். *கஜபாஹு*, இலங்கை கடற்படை தமது ஆட்புல நீர்ப்பரப்பிலும் பிரத்தியேக பொருளாதார வலயங்களிலும் ரோந்து பணிகளில் ஈடுபடுவதற்கான அதனது திறனை அதிகரித்துள்ளது.
- 2020 வசந்தகாலப் பகுதியில், எஸ்.எல்.என்.எஸ் *கஜபாஹுவும்* அமெரிக்காவினால் அன்பளிப்பு செய்யப்பட்ட இன்னுமொரு கப்பலான எஸ்.எல்.என்.எஸ் *சமுதுரவும்* மொத்தம் 33 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான ஹெரோயின் மற்றும் படிக மெத்தாம்பெட்டமைன் கடத்தலை தடுத்து நிறுத்துவதில் ஈடுபட்டிருந்தன.

**நீண்டகாலம் நீடிக்கும் வர்த்தக உறவுகள்**

- இலங்கையின் தனியான மிகப்பெரிய ஏற்றுமதி சந்தையாகவும் இலங்கையின் மிகப்பெரிய வர்த்தக பங்காளராகவும் அமெரிக்கா இருக்கிறது.
- 2019 ஆம் ஆண்டில் இலங்கை அமெரிக்காவுக்கு 2.7 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான பொருட்களை ஏற்றுமதி செய்துள்ளது. அவற்றில் 1.8 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமானவை தைத்த ஆடைகளாகும்.
- அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட பொருட்களுக்கான முக்கியமானதொரு வாடிக்கையாளராகவும் இலங்கையை அமெரிக்கா பார்க்கிறது. அதிநவீன இயந்திரங்கள் தொடக்கம் விவசாய உற்பத்திகள் வரை இலங்கை பொருளாதாரத்தின் பல துறைகளுக்கு அமெரிக்கா பொருட்களை ஏற்றுமதி செய்கிறது. அமெரிக்க மற்றும் இலங்கை அரசாங்கங்கள் இலங்கைக்குள் அமெரிக்க ஏற்றுமதிகள் மற்றும் முதலீடுகளை விஸ்தரிக்க பணியாற்றி வருகின்றன.

- இலங்கையுடன் வர்த்தகங்களை நடத்தும் அமெரிக்க நிறுவனங்களுக்கு உதவுவதில் அமெரிக்க அரசாங்கம் பெருமை கொள்கிறது. அனைவருக்கும் நியாயமானதும் வெளிப்படையானதுமான பொருளாதார நிலைமைகளை உருவாக்கும் கொள்கைகள் மற்றும் செயன்முறைகளை நாம் தொடர்ந்தும் இலங்கையில் ஊக்குவிப்போம்.